பக்கங்கள் 21+2

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 04 ஞாயிற்றுக்கிழமை 18.01.2026 | அதிர்வு 172

## குருநாகலில் ஒருவர் சுட்டுப் படுகொலை!

குருநாகல் – அலவ்வ, வில்கமுவ பகுதியில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார் எனச் சந்தேகிக்கப்படும் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

02▸

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# அன்று போட்ட விளையாட்டை இன்று போட வரவேண்டாம்!

### இப்படி அநுரவின் சொந்த ஊரில் முழங்கிய நாமல்

“1988, 1989களில் போட்ட விளையாட்டை தற்போது போட வர வேண்டாம். அந்த அரசியல் கலாசாரம் மாறி விட்டது. அன்று மஹிந்த ராஜபக்ஷ இருந்தார். இன்று நாமல் ராஜபக்ஷ இருக்கின்றார். இது புதிய அரசியல் பரம்பரை என்பதைப் புரிந்துகொண்டால் சரி.”

- இவ்வாறு இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் சொந்த ஊரான அநுராதபுரம், தம்புத்தேகமவில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி

02▸

# பதுளையில் கோர விபத்து! பஸ் சாரதி பரிதாபச் சாவு!!

### நடத்துநர் உட்பட மூவர் காயம்

கொழும்பு – பதுளை பிரதான வீதியில், ஹல்துமுல்ல, கலுபஹான பகுதியில் உள்ள ஒரு வளைவில் இன்று காலை தனியார் பயணிகள் பஸ் ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் பஸ் சாரதி உயிரிழந்துள்ளார்.

மேலும், விபத்தில் காயமடைந்த பஸ் நடத்துநர், சிறு குழந்தை மற்றும் பெண் ஒருவர் என மூவர் காயமடைந்த நிலையில் தியத்தலாவ, பதுளை பொது வைத்தியசாலையிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

02▸



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்











**அன்று போட்ட...**

நேற்று நடத்திய அரசியல் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே நாமல் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து சென்றவர்களை மீண்டும் கட்சிக்கு வருமாறு அழைப்பு விடுக்கின்றேன். பேச்சு நடத்துவதற்கு நாம் தயாராகவே இருக்கின்றேன்.” – என்றும் நாமல் எம்.பி. அழைப்பு விடுத்தார்.

அடக்குமுறைமூலம் தமது அரசியல் பயணத்தைத் தடுக்க முடியாது என்றும் நாமல் எம்.பி. சூளுரைத்தார்.

---

**பதுளையில்...**

பஸ் சாரதியின் பக்கமிருந்த கதவு திறந்திருந்ததால், அதை மூட முயன்ற போது, பஸ் கட்டுப்பாட்டை இழந்து அருகிலுள்ள ஒரு தடுப்பில் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்து இடம்பெற்ற நேரத்தில் பஸ் சாரதி பாதுகாப்பு பட்டி (சீட் பெல்ட்) அணியவில்லை என்றும் தெரியவந்துள்ளது.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹல்தமுல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

---

**குருநாகலில்...**

வில்கமுவ பகுதியில் நபர் ஒருவர் சடலமாகக் கிடப்பதாகக் கிடைத்த தகவலையடுத்துப் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சடலத்தை மீட்டனர்.

இந்தச் சடலம் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் காணப்படுவதால், இது ஒரு திட்டமிட்ட கொலையாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்தச் சம்பவத்துக்கான காரணம் என்ன? கொலையாளிகள் யார்? என்பது குறித்து அலவ்வ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# இ.தொ.கா. உறுப்பினர்கள் இந்தியா பயணம்



இலங்கைக்கான இந்திய உயர்ஸ் தானிகர் சந்தோஷ் ஜாவிடம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (இ.தொ.கா.) பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் முன்வைத்த பரிந்துரைக்கு அமை வாக, இ.தொ.காவைச் சேர்ந்த 20 உள்ளூ ராட்சி மன்ற உப தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் இன்று இந்தியா பயண மானார்கள்.

இந்திய அரசாங்கத்தின் ஏற்பாட் டில், இம்மாதம் 19ஆம் திகதியிலி ருந்து 29ஆம் திகதி வரை 11 நாட்கள் இந்தியாவின் தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை வலுவூட்டும் விசேட செயலமர்வில் பங் கேற்பதற்காக இந்தக் குழு இந்தியா செல்கின்றது.

இந்தச் செயலமர்வில் இலங்கை யிலிருந்து நுவரெலியா, பதுளை, மாத் தளை மற்றும் கண்டி மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தி இ.தொ.காவைச் சேர்ந்த மொத்தம் 20 உள்ளூராட்சி மன்ற உப தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தச் செயலமர்வு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செய லாளர் ஜீவன் தொண்டமா னின் பரிந்து ரையின் கீழ், இந்திய அரசு முன்னெடுக்கும் முதலாவது வேலைத்திட்டமாக அமை கின்றது. உள்ளூராட்சி நிர்வாகத் திறன் களை மேம்படுத்துதல், மக்கள் சேவை செயற்றிறன் மற்றும் அபிவிருத்தி சார்ந்த நடைமுறை முன்னேற்ம் ஆகிய வற்றை வலுப்படுத்தும் நோக்கில் இந்தச் செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

இந்தச் செயலமர்வில் நுவரெலியா மாவட்டத்திலிருந்து 15 உறுப்பினர் களும், பதுளை மாவட்டத்திலிருந்து 3 உறுப்பினர்களும், மாத்தளை மாவட்டத் திலிருந்து ஓர் உறுப்பினரும், கண்டி மாவட்டத்திலிருந்து ஓர் உறுப்பினரும் என மொத்தமாக 20 உறுப்பினர்கள் கலந்துகொள்கின்றனர்.

முன்னதாக கடந்த ஆண்டு (2025) ஆகஸ்ட் மாதம் 3ஆம் திகதி, நுவ ரெலியாவில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவைச் சந் தித்த ஜீவன் தொண்டமான், புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்காக இந்தியாவில் நடைபெறவுள்ள பயிற்சிப் பட்டறையில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் 20 உறுப்பினர்களுக்கு பங் கேற்பதற்கான வாய்ப்பை வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார். அதற்கு உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, விரை வில் சாதகமான பதிலை வழங்குவதாக உறுதியளித்திருந்தார்.

அந்த உறுதியளிப்பிற்கிணங்க, இப் போது இ.தொ.கா. சார்பில் 20 உள்ளூ ராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு இந்தப் பயிற்சி செயலமர்வில் பங்கேற்பதற் கான வாய்ப்புக் கிடைத்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

# போதைப்பொருள்களுடன் 882 பேர் நேற்று சிக்கினர்!

ஜனாதிபதியின் பணிப்புரைக்க மைய, நாட்டில் போதைப்பொருளை தடுக்கும் நோக்கிலான “முழு நாடுமே ஒன்றாக” எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்று சனிக்கிழமை தேடுதல் நட வடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்ட போது 882 பேர் பெருமளவு போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ள னர் என்று பொலிஸார் தெரிவித்த னர்.

இந்தப் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின்போது சிக்கிய சந் தேகநபர்கள் வைத்திருந்த போதைப் பொருட்களையும் பொலிஸார் கைப் பற்றியுள்ளனர்.

அதன்படி, 400 கிராம் ஹெரோயின், ஒரு கிலோகிராம் 11 கிராம் ஐஸ், 500 கிராம் கொக்கெய்ன், 3 கிலோகிராம் 247 கிராம் கஞ்சா, 88 ஆயிரத்து 50 கஞ்சா செடிகள், 10 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 32 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 2 ஆயிரத்து 663 போதை மாத்திரைகள், 2 கிலோகிராம் 491 கிராம் மதனமோதகம் மற்றும் 550 கிராம் மாவா போதைப்பொருள் என் பன பொலிஸாரால் கைப்பற்றப்பட் டுள்ளன.

இந்தப் போதைப்பொருட்களை வைத் திருந்த 882 சந்தேக நபர்களுடன் தடுப் புக்காவல் உத்தரவு பெற்ற 9 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், சட்டவிரோத சொத்துகள் தொடர்பான விசாரணைகளுக்க மைய ஒருவர் கைது செய்யப்பட்டுள் ளார்.

அத்துடன், 879 சோதனைகள் நடத் தப்பட்டுள்ளதுடன், ஒருவர் மறுவாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.




## 69 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது!

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய வருகை முனையத்தின், 'கிரீன் சேனல்' வழியாக சட்டவிரோத மாக நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் சுமார் 68 இலட்சத்து 85 ஆயிரம் ரூபா மதிப்புள்ள சிக ரெட்டுகள் மற்றும் மின்னணு சிக ரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று விமான நிலைய சுங்க அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று சனிக்கிழமை காலை 5 மணிக்கு டுபாயிலிருந்து எமிரேட்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு மேற்படி சந்தேகநபர் வந்திருந்தார்.

பாணந்துறை பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய நபரே கைது செய்யப் பட்டுள்ளார்.

அவர் 3 பயணப்பைகளில் 44 ஆயிரத்து 400 'மான்செஸ்டர்' மற்றும் 'பிளாட்டினம்' சிகரெட்டுகள் மற்றும் 15 மின்னணு சிகரெட்டுகள் அடங் கிய 222 அட்டைப் பெட்டிகளைக் கொண்டுவந்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் அவரைத் தடுத்து நிறுத்தி, மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முன்னாள் எம்.பி. நந்தன குணதிலக இன்று காலமானார்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர் நந்தன குணதிலக காலமானார்.

நீண்ட காலமாக நோய்வாய்ப் பட்டிருந்த அவர், இன்று அதிகாலை ராகம போதனா வைத்தியசாலையில் காலமானார்.

உயிரிழக்கும் போது அவருக்கு 64 வயதாகும்.

மக்கள் விடுதலை முன்னணியின் ஆரம்பகால உறுப்பினரான இவர்,

அந்தக் கட்சியைப் பிரதிநிதித்து வப்படுத்தி ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டிருந்தார்.

பின்னர் மக்கள் விடுதலை முன் னணியிலிருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துகொண்ட அவர், அந்தக் கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்தி பாணந்துறை நகர சபையின் மேயராகவும் பதவி வகித்திருந்தார்.




நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சிறிதரனின் முக்கியத்துவம்

எதிர்பார்த்தபடி அரசமைப்புக் கவுன்ஸில் செயற்பாடு இக்கட்டில் வந்து சிக்கி நிற்கின்றது.

மிக முக்கியமான உயர் பதவிகளில் உரியவர்களை நியமிப்பதற்கான ஜனாதிபதியின் பரிந்துரைகளை அங்கீகரிக்கும் பொறுப்பு அரசமைப்பு கவுன்ஸிலுக்கே உள்ளது.

பத்து உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் கவுன்ஸிலில் தலைவரான சபாநாயகருக்கு வாக்களிப்பு சமனாக வந்தால் மாத்திரமே அதில் தலையிட்டு முடிவு செய்யும் வாக்கை அளிக்கும் உரித்து உண்டு. இல்லையேல் அவருக்கு வாக்களிப்பு உரித்தில்லை.

எஞ்சிய 9 உறுப்பினர்களில் சிவில் சமூகப் பிரதி நிதிகள் மூவரும், எதிர்க்கட்சித் தலைவரும் அவரது பிரதிநிதியுமாக ஐவர் ஒரு தரப்பில் பெரும்பாலும் நிற்பதால் அரசாங்கம் தான் நினைத்ததை செய்ய முடியாத இக்கட்டில் அல்லாடுகின்றது. பிரதமரும், பிரதமரின் பிரதிநிதியும், ஜனாதிபதியின் பிரதிநிதியும் என மூவரும், தமிழரசு கட்சியின் சிறிதரனும் எனத் தங்கள் பக்கத்தில் நால்வர் ஓரணியில் இருக்கின்றனர் என்று அரசுத் தரப்புக் கருதுகின்றது.

இந்தச் சூழ்நிலையில் மூன்று சிவில் சமூகப் பிரதிநிதிகளின் மூன்றாண்டு காலப் பதவிக்காலம் முடிவடையும் நிலையில், அந்த மூவரின் இடத்திற்கு குறைந்தபட்சம் தங்களுக்குச் சார்பாக செயற்படக் கூடிய ஒருவரை நியமித்தால் அரசமைப்பு கவுன்ஸிலை தம்மிஷ்டப்படி கொண்டு நடத்தலாம் என்று ஆளும் தரப்புக் கருதுவதாகத் தெரிகிறது.

ஆனால், சிவில் சமூகப் பிரதிநிதிகள் என்ற இந்த மூன்று இடங்களுக்கும் மூவரை பிரதமரும் எதிர்க்கட்சி தலைவரும் இணைந்து, இணங்கி நியமிக்க வேண்டும் என்று அரசமைப்பு வலியுறுத்துகிறது. அத்தகைய நியமனம் நடக்கும் வரை பழைய உறுப்பினர்கள் பதவியில் தொடர்வர் என்பதுதான் அரசமைப்பு ஏற்பாடு.

இதில் ஆளும் தரப்புக்கு விட்டே கொடுப்பதில்லை, மூவரையும் நடுநிலைப் பிரதிநிதிகளாக நியமிக்க மட்டுமே இணங்குவது என்பதில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மிக உறுதியாக இருக்கிறார் எனத் தெரிகிறது. அவர் விருப்பப்படி இருவரையும், பிரதமரின் விருப்பப்படி ஒருவரையும் நியமிக்கலாம் என்று பிரதமர் தரப்பு யோசனை முன்வைக்கின்றது. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் தரப்பு அதற்கு இணங்குவதாக இல்லை.

பிரதமர் தரப்பின் இந்தக் கணக்கீடு, தங்கள் அணியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினரான சிறிதரனையும் ஒருவராகக் கணக்கெடுத்துத்தான் முன்னெடுக்கப்படுகின்றது என்பது கவனிக்கத்தக்கது.

இந்தப் பின்புலத்தில் அரசமைப்புக் கவுன்ஸிலில் சிறிதரனின் உறுப்புரிமை முக்கியத்துவம் பெறுகிறது. பிரதான எதிர்க்கட்சி அல்லாத பிற எதிர்க் கட்சிகளின் பிரதிநிதியாக அரசமைப்பு கவுன்ஸிலில் செயற்பட வேண்டிய சிறிதரனை அரசுத் தரப்பு தனது பிரதிநிதியாக கணக்கில் கொள்வது என்பது சிறிதரனுக்கும் இழுக்கு, அவர் சார்ந்த தமிழ்த் தேசிய அரசியலுக்கும் இழுக்கு. அவரது தமிழரசுக்கும் இழுக்கு.

அந்த அரசமைப்பு கவுன்ஸில் உறுப்புரிமை பதவியில் இருந்து சிறிதரனை விலகும்படி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு கோரியிருக்கின்ற பிரச்சினையை இந்தப் பின்புலத்தில்தான் நாம் பார்க்க வேண்டும்.

இனிமேலாவது சிறிதரன் தமிழ்த் தேசிய அரசியலின் பொறுப்போடு பணியாற்ற வேண்டும். அரசமைப்புக் கவுன்ஸில் தொடர்பான அவரது முடிவு எந்தச் சமயத்திலும் தமிழ்த் தேசிய அரசியலுக்கு முரணாகச் செல்லாமல் இருப்பதை அவர் உறுதிப்படுத்த வேண்டும்.



# மண்ணோடு மறையும் மரபு: அழிந்து வரும் நமது பாரம்பரிய கிராமிய விளையாட்டுகள்...!

ஒரு காலத்தில் கிராமம் என்றால் சூரியன் மறையும் மாலை நேரத்தில் வீடுகளிலிருந்து வெளியே ஓடிவரும் குழந்தைகளின் சிரிப்பு, தூசியில் விளையாடும் இளைஞர்களின் உற்சாகம், வட்டமாக நின்று விளையாட்டைப் பார்த்து கைத்தட்டும் முதியோர்களின் முகத்தில் தோன்றும் பெருமை என்பனவே எமது நினைவுக்கு வரும்.

இவ்வாறு கிராம வாழ்வின் உயிர்துடிப்பாக இருந்தவையே பாரம்பரிய கிராம விளையாட்டுகள் ஆகும். ஆனால் இன்று, வெறுமனே நினைவுகளாக மட்டுமே எஞ்சியுள்ளன. இந்த விளையாட்டுக்கள் இன்றைய நவீனத் தொழில்நுட்பத்தின் வலையில் மெல்ல மெல்ல அழிவின் விளிம்பிற்குச் சென்று கொண்டிருக்கின்றன.

இது வெறும் பொழுதுபோக்கு அம்சங்களின் அழிவு மட்டுமல்ல. ஒரு இனத்தின் அடையாளம், உடல்நலம் மற்றும் சமூக ஒற்றுமையின் வீழ்ச்சியாகவே நாம் பார்க்க வேண்டியுள்ளது.

தமிழர் பண்பாட்டில் விளையாட்டுகள் என்பவை வெறும் பொழுதுபோக்குக்கான கருவிகளாக ஒருபோதும் இருந்ததில்லை. அவை தமிழரின் வாழ்வியலோடு ஆழமாகப் பின்னிப்பிணைந்தவை. சங்ககால இலக்கியங்கள் தொட்டே நமது விளையாட்டுகள் வீரத்தையும், மதிநுட்பத்தையும், சகிப்புத்தன்மையையும் பறைசாற்றுபவையாக இருந்துள்ளன.

உதாரணமாக, ‘ஏறுதழுவுதல்’ எனப்படும் ஜல்லிக்கட்டு விளையாட்டு என்பது ஒருவனின் வீரத்தைப் பரிசோதிக்கும் களம் என்றால், ‘பல்லாங்குழி’ என்பது ஒரு பெண்ணின் கணக்குத் திறனையும், சேமிப்புப் பழக்கத்தையும் வளர்க்கும் கருவியாகத் திகழ்ந்தது. ஒவ்வொரு விளையாட்டும் ஏதோ ஒரு தத்துவத்தை அல்லது வாழ்வியல் பாடத்தை மறைமுகமாகக் கற்றுக்கொடுத்தன.

இன்று நாம் இழந்து கொண்டிருக்கும் பொக்கிஷங்கள் ஏராளம் என்றே கூறலாம்.

கபடி விளையாட்டு இன்று சர்வதேச அளவில் புகழ்பெற்றிருந்தாலும் கிராமத்து மண்ணில்

தொடர்ச்சி▼

# மண்ணோடு மறையும் மரபு: அழிந்து வரும் நமது பாரம்பரிய கிராமிய விளையாட்டுகள்...!

தொடர்ச்சி▲

அது விளையாடப்பட்ட விதம் தனித்துவமானது. எவ்விதப் பாதுகாப்பு உபகரணங்களும் இன்றி வெறும் வீரத்தை மட்டும் மூலதனமாகக் கொண்டு ஆடிய அந்த ஆட்டம் இன்று நவீனத்தினுள் சுருங்கி விட்டது.

அதேபோல் உலகிலேயே மிகச்சிறந்த கணித விளையாட்டாகக் கருதப்படும் பல்லாங்குழி விளையாட்டானது குழந்தைகளின் விரல் நுனி நரம்புகளைத் தூண்டி மூளை வளர்ச்சியை மேம்படுத்தியது. இன்று இந்தக் குழிகளில் தூசுதான் படிந்து கிடக்கிறது. கிரிக்கெட்டின் முன்னோடி என்று சொல்லத்தக்க 'கிட்டிப்புள்ளு' விளையாட்டு ஒரு சிறிய குச்சியையும் பெரிய தடியையும் கொண்டு ஆடுவதோடு ஒருவரின் மனதை ஒருமுகப்படுத்தும் திறனை வளர்க்க வல்லது.

அதேபோல் திண்ணைகளில் அமர்ந்து ஆடிய தாயம் மற்றும் போர்த்தந்திரங்களை எடுத்துரைக்கும் ஆடுபுலி ஆட்டம் போன்றவை குடும்ப உறுப்பினர்களிடையே உரையாடலையும் நெருக்கத்தையும் அன்றைய காலத்தில் வளர்த்தன.

தற்போது பாரம்பரிய விளையாட்டுகள் மறைவதற்குப் பின்னால் பல்வேறு சமூக மாற்றங்கள் மற்றும் காரணங்கள் உள்ளன. குறிப்பாக ஸ்மார்ட் தொலைபேசிகளும் , வீடியோ கேம்களும் சிறுவர்களை நான்கு சுவர்களுக்குள் முடக்கிவிட்டன.

மைதானத்தில் ஓடி விளையாடுவதை விட திரையில் விரல்களை அசைப்பதையே இன்றைய தலைமுறை விரும்புகின்றது. இதற்குப் பெற்றோரின் மனநிலையும் ஒரு காரணம் எனலாம். "விளையாடினால் உருப்படமாட்டாய்" என்ற எண்ணமும், அதிகூடிய மதிப்பெண்கள் தமது பிள்ளைகள் பெற வேண்டும் என்ற மனநிலையும் குழந்தைகளின் விளையாட்டு நேரத்தைப் பறித்துவிட்டன.

கிராமங்கள் நகரங்களாக மாறும்போது பரந்து விரிந்த மைதானங்கள் அடுக்குமாடி குடியிருப்புகளாக மாறிவிட்டதால் தெருக்களில் விளையாட இடமில்லாத சூழல் உருவாகியுள்ளது. இவ்வாறு இருந்தபோதிலும் இக்கிராமிய விளையாட்டுகளுக்குப் பின்னால் இருக்கும் அறிவியல் மற்றும் மருத்துவப் பலன்கள் குறித்து அடுத்த தலைமுறைக்கு நாம் எடுத்துச் சொல்ல வேண்டிய கடமை அனைவருக்கும் உள்ளது.

நவீன உடற்பயிற்சிக் கூடங்களில் செலவழிக்கும் அதிகமான பணத்தை விட நமது கிராமத்து விளையாட்டுகள் தரும் ஆரோக்கியப் பலன்கள் அதிகமானது. நுங்கு வண்டி தள்ளுதல், பம்பரம் விடுதல், பாண்டி ஆடுதல் போன்றவை உடலின் அனைத்துப் பாகங்களுக்கும் சிறந்த பயிற்சியைத் தருகின்றன. குழுவாக விளையாடும்போது விட்டுக் கொடுத்தல், தலைமைப் பண்பு, தோல்வியைத் தாங்கும் மனப்பக்குவம் போன்றவை இயல்பாகவே வளர்கின்றன. கோலி குண்டு விளையாடுதல் மற்றும் கிட்டிப்புள்ளு போன்றவை கண் நரம்புகளை வலுப்படுத்தி பார்வைத்திறனை மேம்படுத்துகின்றன. இவை எதையும்ஒருகுளிரூட்டப்பட்டஅறைக்குள்அமர்ந்து கொண்டு பெறும் வீடியோ கேம்களால் ஈடு செய்ய முடியாது.

நமது பாரம்பரியத்தை மீட்டெடுப்பது என்பது ஒரு காலத்தின் கட்டாயமாகும். இதற்குப் பாடசாலைகள் மற்றும் பெற்றோர்களின் ஒத்துழைப்பு மிக அவசியம். ஒவ்வொரு பாடசாலைகளிலும் வாரத்தில் ஒரு முறையாவது தாயம், பல்லாங்குழி அல்லது கபடி போன்ற விளையாட்டுகளை முறைப்படி கற்றுக்கொடுக்க வேண்டும். கிராமத் திருவிழாக்களில் நவீன கலை நிகழ்ச்சிகளைத் தவிர்த்து பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தி இளைஞர்களை ஊக்குவிக்க வேண்டும். குழந்தைகளுக்குப் பிறந்தநாள் பரிசாக நுடநஉவசழநைெ சாதனங்களை வழங்காமல் பம்பரம் அல்லது தாயம் போன்ற விளையாட்டு உபகரணங்களை வாங்கிக் கொடுத்து அவற்றை விளையாட பெற்றோர்களும் நேரத்தை ஒதுக்கி தமது பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும்.

அரச தரப்பிலும் இத்தகைய விளையாட்டுகளுக்கு அங்கீகாரம் வழங்கி மாவட்ட அளவிலான போட்டிகளை முன்னெடுக்க வேண்டும்.

விளையாட்டுகள் என்பவை வெறும் உடல் அசைவுகள் அல்ல. அவை நமது மூதாதையர்கள் நமக்கு விட்டுச் சென்ற வாழ்வியல் சொத்துக்களாகும். ஒரு பம்பரம் சுழலும்போது அது வெறும் மரக்கட்டை அல்ல, அது நமது கலாச்சாரத்தின் சக்கரமாகச் சுழல்கின்றது. இனிமேலும் நாம் தாமதித்தால் எதிர்காலத் தலைமுறைக்கு நமது விளையாட்டுகளைப் புகைப்படங்களில் மட்டுமேதான் காட்ட வேண்டியிருக்கும். எனவே மண் காற்றை சுவாசித்து மண்ணின் பாரம்பரிய விளையாட்டுகளை மீட்டெடுப்போம். நமது அடையாளத்தை நமக்காகவும், அடுத்த தலைமுறைக்காகவும் உரக்கச் சொல்வோம்.



**இ.அபினகா,**
**ஊடக கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

சிந்துஜா சதீஸ்வரன்
3ஆம் வருடம்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.




# மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும் சமூகமாக மாற்றமடைவோம்!

இன்றைய யாழ்ப்பாணம் மெதுவாக ஆனால் உறுதியாக நவீன நகர வாழ்வின் பாதையில் பயணிக்கத் தொடங்கியுள்ளது. பல தசாப்தங்களாக பாரம்பரியம், ஒழுக்கம், அமைதி என்பவற்றின் அடையாளமாகக் கருதப்பட்ட இந்தப் பிரதேசம் இன்று தொழில்நுட்ப வளர்ச்சியின் தாக்கத்தால் புதிய சமூக மாற்றங்களை எதிர்கொண்டு வருகிறது. அந்த மாற்றங்களின் வெளிப்படையான ஒரு சின்னமாக pick me போன்ற மொபைல் அடிப்படையிலான போக்குவரத்து சேவைகள் யாழ்ப்பாணத்தில் நிலைபெற்று வருகின்றன.

ஒருகாலத்தில் யாழ்ப்பாண மக்களின் போக்குவரத்து தேவைகள் பெரும்பாலும் அரச பஸ்கள், தனியார் பேருந்துகள், மிதிவண்டிகள் மற்றும் ஓட்டோக்கள் மூலமே பூர்த்தி செய்யப்பட்டன. குறிப்பிட்ட நேர அட்டவணை, குறைந்த வசதி, கூட்ட நெரிசல் போன்ற பிரச்சினைகள் மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஒரு பகுதியாகவே இருந்தன. இந்த நிலையில், ஸ்மார்ட் போன் பயன்பாட்டின் அதிகரிப்பும் இணைய வசதியின் பரவலும் pick me போன்ற சேவைகள் யாழ்ப்பாணத்துக்குள் நுழைய வழிவகுத்தன.

pick me சேவை யாழ்ப்பாணத்தில் அறிமுகமான ஆரம்ப காலங்களில் இது ஒரு "நகர மையத்துக்கான சேவை" என்றே பலரால் கருதப்பட்டது. ஆனால் தற்போது நல்லூர், சுன்னாகம், நாவாந்துறை, கொக்குவில், மானிப்பாய் போன்ற பகுதிகளிலும் இந்த சேவை விரிவடைந்து வருகிறது. இதன் மூலம் நகரம் – கிராமம் என்ற வேறுபாடு மெல்லக் குறைந்து வருவதை காண முடிகிறது.

இந்த சேவையின் முக்கிய பலனாக நேர சேமிப்பு மற்றும் வசதி குறிப்பிடப்படுகின்றன. அலுவலகத்துக்குச் செல்லும் ஊழியர்கள், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு செல்லும் மாணவர்கள், மருத்துவ தேவைகளுக்காக பயணிப்போர் எனப் பலரும் pick me யை நம்பத் தொடங்கியுள்ளனர். குறிப்பாக இரவு நேரங்களில் அல்லது அவசர தேவைகளில், பாதுகாப்பான போக்குவரத்து என்ற நம்பிக்கை மக்களிடையே உருவாகியுள்ளது.

அதே நேரத்தில் pick me சேவை யாழ்ப்பாண இளைஞர்களுக்கு புதிய வருமான வாய்ப்பையும் உருவாக்கியுள்ளது. வேலைவாய்ப்பு பற்றாக்குறை நிலவும் சூழலில், சொந்த மோட்டார் சைக்கிள் அல்லது கார் வைத்திருக்கும் இளைஞர்கள் pick me ஓட்டுநர்களாக இணைந்து தங்களின் குடும்பச் செலவுகளை நிரப்பும் நிலை உருவாகியுள்ளது. இது, இன்றைய யாழ்ப்பாணத்தின் பொருளாதார மாற்றத்தின் ஒரு பிரதிபலிப்பாகவே பார்க்கப்படுகிறது.

எனினும், இந்த மாற்றம் முழுமையாக வரவேற்பைப் பெற்றதாக சொல்ல முடியாது. பாரம்பரிய ஓட்டோ ஓட்டுநர்கள் மற்றும் தனியார் வாடகை வாகன ஓட்டுநர்கள், pick me சேவையால் தங்களின் வருமானம் பாதிக்கப்படுகிறது என்று கவலை தெரிவிக்கின்றனர். கட்டண போட்டி, பயணிகளின் மனப்போக்கு மாற்றம், தொழில்நுட்ப அறிவு பற்றாக்குறை போன்றவை அவர்களது வாழ்வாதாரத்தில் சவால்களை ஏற்படுத்தியுள்ளன. இதன் காரணமாக, யாழ்ப்பாணத்தில் ஒரு மறைமுகமான சமூக மோதலும் உருவாகி வருவதை அவதானிக்க முடிகிறது.

சமூக ஆய்வாளர்கள் கூறுவதுபோல், pick me என்பது வெறும் போக்குவரத்து சேவையல்ல. அது இன்றைய யாழ்ப்பாணத்தின் வாழ்க்கை முறை மாற்றத்தின் ஒரு குறியீடு. பாரம்பரிய சமூக அமைப்பில் நவீன தொழில்நுட்பம் ஊடுருவும் போது ஏற்படும் சவால்களும், வாய்ப்புகளும் இங்கு தெளிவாகப் பிரதிபலிக்கின்றன.

மொத்தத்தில், pick me போன்ற சேவைகள் யாழ்ப்பாணத்தை ஒரு புதிய காலகட்டத்துக்குள் இட்டுச் செல்கின்றன. பாரம்பரியத்தையும் நவீனத்தையும் சமநிலைப்படுத்திக் கொண்டு, அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் இந்த மாற்றங்களை வழிநடத்துவதே இன்றைய யாழ்ப்பாணத்தின் முன் நிற்கும் முக்கிய சவாலாகும். இன்றைய யாழ்ப்பாணம், மாற்றங்களை மறுக்கும் சமூகமாக அல்ல. மாற்றங்களை விவேகமாக ஏற்றுக் கொள்ளும் சமூகமாக உருவெடுக்க வேண்டிய கால கட்டத்தில் நிற்கிறது.






# போதையின் பிடியில் மாணவர்களின் எதிர்காலம்!

ஒரு தேசத்தின் உண்மையான செல்வம் அதன் எல்லைகளில் இல்லை, அந்தத் தேசத்தின் இளைஞர்களின் மனவலிமையிலும் அறிவிலும்தான் இருக்கிறது.

எதிர்காலத் தூண்களாகக் கருதப்படும் மாணவர்கள், இன்று "போதை" என்னும் கண்ணுக்குத் தெரியாத அரக்கனின் பிடியில் சிக்கித் தவிப்பது பெரும் கவலையை அளிக்கிறது.

ஒரு காலத்தில் முதியவர்களிடமும், வசதி படைத்தவர்களிடமும் மட்டுமே காணப்பட்ட இந்தப் பழக்கம், இன்று பள்ளிச் சீருடை அணிந்த சிறுவர்களிடமும் பரவி வருவது ஒரு சமூக அவசர நிலையாக மாறியுள்ளது. மாணவர்கள் விளையாட்டுத்தனமாகத் தொடங்கும் இந்த ஒரு நிமிட இன்பம், அவர்களின் வாழ்நாள் கனவுகளையும், அவர்களைப் பெற்றெடுத்த பெற்றோரின் தியாகங்களையும் சாம்பலாக்கி விடுகிறது.

முந்தைய காலங்களில் புகைப்பிடித்தல் மற்றும் மது அருந்துதல் போன்றவை மட்டுமே போதைப் பழக்கங்களாக அறியப்பட்டன. ஆனால் இன்று தொழில்நுட்ப வளர்ச்சியும், ரசாயனக் கண்டுபிடிப்புகளும் போதையின் வடிவத்தையே மாற்றிவிட்டன. கஞ்சா, அபின் போன்ற இயற்கை போதைப் பொருள்களைத் தாண்டி, இன்று சிந்தெடிக் மருந்துகள் மற்றும் ஊசி மூலம் செலுத்தப்படும் திரவங்கள் மாணவர்களிடையே புழக்கத்தில் உள்ளன. இவை மிகவும் வீரியம் மிக்கவை மற்றும் மிக எளிதில் அடிமையாக்கக் கூடியவை. அதிர்ச்சியான உண்மை என்னவென்றால், பல பாடசாலைகளின் அருகிலேயே சாதாரண மிட்டாய்களைப் போல இவை விற்பனை செய்யப்படுகின்றன. ஒன்லைன் மூலமாகவும், இரகசியச் செயலிகள் மூலமாகவும் இவை மாணவர்களின் கைகளுக்கு மிக எளிதாகக் கிடைப்பது அதிகாரிகளுக்குப் பெரும் சவாலாக உள்ளது.

மாணவர்கள் ஏன் போதையின் பக்கம் ஈர்க்கப்படுகிறார்கள் என்பதை ஆராய்ந்தால் பல காரணங்கள் வெளிவருகின்றன. குறிப்பாக, நண்பர்களின் அழுத்தம் இதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. "இதைச் செய்யவில்லை என்றால் நீ கோழை" என்ற கிண்டலுக்கு அஞ்சி, பல மாணவர்கள் போதையைத் தொடங்குகின்றனர். மேலும், வெள்ளித்திரையில் கதாநாயகர்கள் போதைப் பொருட்களைப் பயன்படுத்துவதை ஒரு வீரச் செயலாகச் சித்திரிக்கப்படுவதை மாணவர்கள் அப்படியே உள்வாங்கிக் கொள்கின்றனர். இதோடு கல்விச் சுமை, போட்டித் தேர்வுகள் மற்றும் குடும்பச் சூழல் காரணமாக ஏற்படும் மன அழுத்தத்திலிருந்து தப்பிக்க ஒரு தற்காலிக வடிகாலாக மாணவர்கள் போதையைத் தேடிச் செல்கின்றனர்.

போதைப் பொருள்கள் ஒரு மாணவனின் உடலை உள்ளிருந்து அரிக்கும் கறையான்கள் போன்றவை. இவை வளரிளம் பருவத்தில் இருக்கும் மாணவர்களின் மூளை வளர்ச்சியை நேரடியாகப் பாதிக்கின்றன. இதனால் கவனிப்புத் திறன், நினைவாற்றல் மற்றும் முடிவெடுக்கும் திறன் ஆகியவை முற்றிலுமாகச் சிதைந்து போகின்றன. உடல் ரீதியாக, கல்லீரல் செயலிழப்பு, இதயம் தொடர்பான வியாதிகள் மற்றும் நரம்பு மண்டலத் தளர்ச்சி போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. மன ரீதியாக, அவர்கள் ஒருவித மாய உலகிலேயே வாழத் தலைப்படுகிறார்கள். போதை கிடைக்காத நேரங்களில் அவர்கள் மிகுந்த வன்முறை எண்ணத்துடனும், தற்கொலை மனப்பான்மையுடனும் காணப்படுகின்றனர். இது அவர்களைச் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தி, ஒரு நடைப்பிணமாக மாற்றிவிடுகிறது.

இந்தச் சிக்கலில் இருந்து மாணவர்களை மீட்டெடுக்க அரசு, கல்வி நிறுவனத்தினர் மற்றும் பெற்றோர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் ஒரு நண்பரைப் போலப் பழகி, அவர்களின் மன மாற்றங்களைக் கவனிப்பது அவசியம். கல்வி நிறுவனங்களில் பாடங்களுடன் சேர்த்து "போதை விழிப்புணர்வு" ஒரு முக்கியப் பகுதியாக இருக்க வேண்டும்.

அரசு இயந்திரம் போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனை செய்பவர்கள் மீது எவ்விதத் தாட்சண்யமும் இன்றி மிகக் கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். போதையில்லாச் சமுதாயத்தை உருவாக்குவது என்பது ஒரு அரசின் வேலை மட்டுமல்ல, அது ஒரு மக்கள் இயக்கமாக மாற வேண்டும். புத்தகங்களையும், கனவுகளையும் ஏந்த வேண்டிய கைகளில் ஊசிகளும் மாத்திரைகளும் இருப்பதை நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.



**பொனிஸ்ரெலா சந்தியாசன்,**
**ஊடகக்கற்கைகள்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**




# கல்முனை ரஹ்மத் பவுண்டேசனால் மாணவர்ளுக்குக் கற்றல் உபகரணம்

**(ஏ.எஸ்.எம்.அர்ஹம்)**

கல்முனை ரஹ்மத் பவுண்டேசனின் சமூக சேவைத் திட்டத்தின் ஒரு பகுதியாக, பாடசாலை மாணவர்களின் கல்வி தேவைகளை கருத்தில் கொண்டு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு நற்பிட்டிமுனை அல் அக்ஸா மத்திய மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்முனை ரஹ்மத் பவுண்டேசனின் அனுசரணையில், நற்பிட்டிமுனை அல் அக்ஸா மத்திய மகா வித்தி யாலய அதிபர் எம்.எல். பதியுதீன் தலை மையில் இடம் பெற்ற இந்த நிகழ்வு ரஹ்மத் பவுண்டேசனின் நற்பிட்டிமுனை இணைப்பாளர்களான பிரின்ஸ் பாலர் பாடசாலை அதிபர் எம்.எம். ரியாஸ் மற்றும் எம்.ஐ. நிரோஸ்ஆகியோ ரின் நெறிப்படுத்தலில் இடம்பெற் றது.

இந்த நிகழ்வில், கல்முனை முன்னாள் மாநகர சபை பிரதி முதல் வரும், ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர ஸின் பொருளாளரும், கல்முனை ரஹ் மத் பவுண்டேசனின் ஸ்தாபகத் தலை வருமான ரஹ்மத் மன்சூர் பிரதம அதிதி யாகக் கலந்து கொண்டார்.

மேலும் இந்நிகழ்வில் மாணவர்களின் கலை கலாச்சார நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

# சாய்ந்தமருது அல் ஹிலால் வித்திக்கு ஒளியூட்டியமைக்கு நன்றி தெரிவிப்பு



**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தி யாலய வளாகத்தை வெளிச்சமூட்டுவதற் காக மின்குமிழ் தொகுதிகளை வழங் கிய மயோன் குழும தலைவரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம் பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாள ருமான எம். றிஸ்லி முஸ்தபாவுக்கு பாடசாலை அதிபர் கே.எல். அப்துல் ஜௌபர் உள்ளிட்ட பாடசாலை சமூகத் தினர் நன்றி தெரிவித்துள்ளனர்.

மயோன் குழும தலைவரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப் பாளருமான எம். றிஸ்லி முஸ்தபா பாட சாலைக்குச் சென்று இந்த மின்குமிழ் தொகுதிகளை அதிபரிடம் கையளித் தார்.

பாடசாலை அதிபர் கே.எல். அப்துல் ஜௌபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.முக் தார், மயோன் குழும உறுப்பினர்களான ஏ.எல்.எம்.நியாஸ், எச்.எம். ஸிஹாப், பாடசாலையின் பிரதி அதிபர்களான எம்.எச். லாபிர், ஏ.பி. ரோஷன் டிப்ராஸ், ஒழுக்காற்றுக்குப் பொறுப்பான ஆசிரியர் எம்.எஸ்.எஸ். ஷிப்லி, உதவி அதிபர்கள், ஆசிரிய ஆசிரியைகள், பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்ட னர்.





# மாளிகைக்காடு கடலரிப்பு பகுதியை பார்வையிட்டது ரவூப் ஹக்கீம் குழு!

(பாறுக் ஷிஹான்)

கல்முனை, மாளிகைக்காடு கரையோரப் பிரதேசங்கள் கடலரிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் வியாழக்கிழமை சென்று பார்வையிட்டார்.

அதன்போது மாளிகைக்காடு மையவாடி அமைந்திருந்த பிரதேசம் கடல் அரிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டு இருப்பதையும் அவதானித்ததுடன் பள்ளிவாசல் நிர்வாகிகளுடன் உரையாடியதோடு அரச அதிகாரிகளுடனும் கலந்தாலோசித்தார்.

இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.நிசாம் காரியப்பர் உட்பட அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்முனை முன்னாள் பிரதி மேயர் ரஹ்மத் மன்சூர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# டித்வா புயலின் போது பணியாற்றிய உத்தியோகத்தர்களுக்கு நன்றி தெரிவிப்பு





(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்ட தம்பலகாமம் பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் வெள்ளிக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலாளர் ஜெயகௌரி ஸ்ரீபதியின் ஒருங்கிணைப்பில் இடம் பெற்றது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இணைத்தலைவரும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் வெளிவிவகார பிரதியமைச்சருமான அருண் ஹேமச்சந்திர தலைமையில் குறித்த கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது டித்வா புயல் நேரத்தில் திறம்பட பணியாற்றிய சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் பிரதியமைச்சர் இதன்போது நன்றிகளை தெரிவித்தார். தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவில் இடம் பெற்றுவரும் முள்ளிப்பொத்தானை தொடக்கம் ஆயிலியடி வரையிலான காப்பெட் வீதி அபிவிருத்தியை துரிதப்படுத்துமாறும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளரிடம் கட்டளையிட்டார்.

யானை வேலி பிரச்சினை, பிரதேச கல்வி மற்றும் வீதி உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பிலும் எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் கடந்தகால அபிவிருத்திகள் தொடர்பான மதிப்பீடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

தம்பலகாமம் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் சில இடங்களில் சுற்றுலா அபிவிருத்தியை மேம்படுத்தவும் பிரதேச வைத்தியசாலையின் பிரேத அறைக்கான குளிரூட்டியைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

தம்பலகாமத்துக்கான தனியார் கல்வி வலயம் ஒன்றை உருவாக்குவது தொடர்பான பிரேரணையும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூபின் கோரிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

இதில் தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளர் எச்.தாலிப் அலி, பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், திணைக்கள தலைவர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பிரதேச சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பொத்துவில், அட்டாளைச்சேனை, இறக்காமம் பகுதிகளுக்கு பல் சத்திரசிகிச்சை நிபுணர்கள்!



நாட்டின் பொதுச் சுகாதார சேவையை வலுப்படுத்தும் நோக்கில், சுகாதார அமைச்சால் புதிதாக நியமிக்கப்பட்ட பல் சத்திரசிகிச்சை நிபுணர்களில் மூவர் கல்முனை பிராந்தியத்தில் உள்ள சுகாதார நிறுவனங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சு அண்மையில் நாடளாவிய ரீதியில் 62 பல் சத்திரசிகிச்சை நிபுணர்களுக்கு புதிய நியமனங்களை வழங்கியிருந்தது. அவர்களில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு இணைப்பு செய்யப்பட்டவர்கள் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, அட்டாளைச்சேனை மற்றும் இறக்காமம் வைத்தியசாலைகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சத்திரசிகிச்சை நிபுணர்களுக்குப் புதிய சேவை நிலையங்களுக்கு உரிய நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது. இதன்போது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் கடிதங்களை உரியவர்களிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் பிராந்திய வாய் சுகாதார பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் யூ.ஹபீப் முஹம்மட், பல் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் பைறூஸ், விடய உத்தியோகத்தர் பீ.எம்.ஹிசான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த புதிய நியமனங்களின் ஊடாக அட்டாளைச்சேனை, இறக்காமம் மற்றும் பொத்துவில் பிரதேச மக்கள் தமக்கான பல் மருத்துவ சிகிச்சைகளை இலகுவாகவும், விரைவாகவும் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மலையக மக்களின் நிலப் பிரச்சினை தொடர்பான விஷேட கலந்துரையாடல்

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

மலையக மக்களின் நிலப் பிரச்சினை தொடர்பாக மக்களை அறிவூட்டுவதற்கும், எதிர்கால நடவடிக்கைகள் குறித்து அவர்களுடன் கலந்துரையாடுவதற்கும் நோக்கமாகக் கொண்டு பெருந்தோட்டத் துறை மக்கள் குரல் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட மாவட்ட மட்ட கலந்துரையாடல்களின் இரண்டாவது கலந்துரையாடல் அண்மையில் களுத்துறை மாவட்டம், மத்துகமையில் உள்ள தனியார் விடுதியில் ஒன்றில் நடைபெற்றது.

மலையக மக்கள் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகளில் மிக முக்கியமானது நிலப் பிரச்சினையாகும். இதுவரை ஆட்சிக்கு வந்த எந்த அரசும் இந்த மக்களின் நிலப் பிரச்சினைக்கு நிலையான தீர்வை வழங்கவில்லை. தற்போதைய அரசும் இதற்கான தெளிவான மற்றும் செயல்திறன் கொண்ட திட்டமொன்றை முன்வைத்துள்ளதாக தெரியவில்லை.

இதனை மையமாக கொண்டு இடம்பெற்ற இக் கலந்துரையாடலில், மலையக மக்களின் நில மற்றும் வீட்டு உரிமைகள் குறித்த மக்களின் கருத்துகள் ஆழமாக விவாதிக்கப்பட்டன. அதே வேளை களுத்துறை மாவட்டத்தில் மலையக மக்கள் எதிர்கொள்ளும் நிலப் பிரச்சினைகள் குறித்தும், எதிர்காலத்தில் மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் மத்துகமை மற்றும் பாலிந்தனுவர பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த தலைவர்கள் மற்றும் தலைவிகள் பங்கேற்றனர். கலந்துரையாடலின் முடிவில், அடுத்த இரண்டு மாதங்களுக்கான செயற்றிட்டமும் தயாரிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலை பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பின் நிறைவேற்று இயக்குநர் அன்டனி ஜேசுதாஸன், திட்ட ஒருங்கிணைப்பாளர் லவீனா ஹசந்தி, தேசிய திட்ட ஒருங்கிணைப்பாளர் பிரான்சிஸ் ராஜன் மற்றும் களுத்துறை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே. யோகசுஜி ஆகியோர் வழிநடத்தினர்.










# வடக்கு, கிழக்கு மறுவாழ்வு அமைப்பால் பொங்கலை முன்னிட்டு உதவி வழங்கல்

வடக்கு, கிழக்கு மறுவாழ்வு அமைப்பால் தைத்திருநாளை முன்னிட்டு, பொருளாதார ரீதியில் நலிவுற்ற குடும்பங்களுக்கு உதவியளிக்கும் நோக்குடன் பொங்கல் பொதிகள் வழங்கும் மனிதநேயச் செயற்பாடு ஐந்தாவது வருடமாகவும் முன்னெடுக்கப்பட்டது.

இந்த சமூக நலத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கொழும்புத்துறை, ஏழாலை, நெல்லியடி, முழங்காவில், ஆவரங்கால், யாழ். புறநகர் பகுதி மற்றும் மானிப்பாய் கட்டுடை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மொத்தம் 275 குடும்பங்களுக்கு தைத்திருநாளுக்கான அத்தியாவசிய பொருள்கள் அடங்கிய பொங்கல் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

தைத்திருநாள் என்பது உழைப்புக்கும், விவசாயத்துக்கும் நன்றி செலுத்தும் ஒரு பாரம்பரியத் திருநாளாகும். அந்த வகையில், இந்தத் திருநாளை பொருளாதார சிரமங்களால் முழுமையாக கொண்டாட முடியாத குடும்பங்களின் வாழ்வில் சிறு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் இந்த உதவித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் வடக்கு, கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் இயக்குநர் சுகிர்தன் கலந்து கொண்டு பயனாளி குடும்பங்களுக்கு பொங்கல் பொதிகளை வழங்கி வைத்தார். அவருடன் அமைப்பின் பணிப்பாளர்கள், தன்னார்வலர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு இந்தச் செயற்பாட்டுக்கு ஆதரவு வழங்கினர்.

பொங்கல் பொதிகளை பெற்றுக் கொண்ட குடும்பங்கள், தைத்திருநாளை முன்னிட்டு இவ்வாறு வழங்கப்பட்ட உதவிக்கு நன்றியைத் தெரிவித்தனர். சமூகத்தில் உள்ள நலிவுற்ற மக்களை நினைவில் கொண்டு செயல்படும் மறுவாழ்வு அமைப்பின் முயற்சிகளை பாராட்டினர்.

இத்தகைய மனிதநேய செயற்பாடுகள் சமூக ஒற்றுமையையும், பரஸ்பர அக்கறையையும் வலுப்படுத்தும் வகையில் முக்கிய பங்கு வகிக்கின்றன என நிகழ்வில் கலந்து கொண்டோர் கருத்துத் தெரிவித்தனர்.







# குப்பைக்கு வைத்த தீ வீட்டுக்குள் பரவியது!



**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணத்தில் குப்பைக்கு வைத்த தீ வீட்டில் பற்றிக்கொண்டதால் வீடொன்று பகுதிகளவில் தீயில் எரிந்துள்ளது

அரியாலை பகுதியில் உள்ள வீடொன்றில் வசிப்பவர்கள் நேற்று சனிக்கிழமை வீட்டு வளவுக்குள் இருந்த குப்பைக்கு தீ வைத்து விட்டு வெளியே சென்றுள்ளனர்.

குப்பையில் பற்றிய தீ அருகில் வீட்டின் கூரையில் பற்றி வீடு தீப்பற்றியுள்ளது.

இதனை அவதானித்த அயலவர்கள் விரைந்து செயற்பட்டு தீயை அணைத்துள்ளனர்.

எனினும் இந்தச் சம்பவத்தில் வீட்டின் ஒரு பகுதி தீயில் எரிந்து நாசமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹெரோயின் மற்றும் ஐஸ்டன் வேலணையில் இருவர் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

விற்பனைக்குத் தயாரான நிலையில் வைத்திருந்த 2 ஆயிரத்து 350 மில்லிக் கிராம் ஹெரோயின் மற்றும் 12 கிராம் ஐஸ் போதைப் பொருள்களுடன் வேலணையில் இருவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்படுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது என்று ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவின் ஆழுகைக்குள் போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனையை இல்லாதொழிக்கும் விசேட நடவடிக்கையை ஊர்காவற்றுறை பொலிஸார் முன்னெடுத்துவரும் நிலையில் தொடர்ச்சியாக பலர் கைதுசெய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளனர்.

ஆனாலும் சிலர் இரகசியமான முறையில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுவருவது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸ் பரிசோதகர் வினோத்குமார் தலைமையிலான அணியினர் முன்னெடுத்த விசேட நடவடிக்கையின் போதே இந்த இருவரும் கைது செய்யப்பட்டனர்.

விற்பனைக்கு தயாராக குறித்த போதைப் பொருள்களை வைத்திருந்த போதே வேலணை திருவள்ளுவர் வீதியைச் சேர்ந்த இருவர் கைதாகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.




இன்னிலையில் தமக்கு நாச்சிக்குடாவில் இருந்தே போதைப்பொருள் கிடைப்பதாக குறித்த இருவரும் பொலிஸாரின் விசாரணையின் போது தெரிவித்திருந்த நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். குறித்த இருவரும் விசாரணைகளின் பின்னர் ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# தெற்குக்கும் வடக்குக்கும் ஒரே சட்டம் எனும் ஜனாதிபதி விகாரை விடயத்தில் அதனை நிறைவேற்றாதது ஏன்?

## கேள்வி எழுப்புகிறார் அருட்தந்தை சத்திவேல்



(பா.சதீசன்)

தெற்குக்கும் வடக்குக்கும் ஒரே சட்டம் எனக் கூறும் ஜனாதிபதி தற்போதைய விகாரை விடயத்தில் அதனை நிறைவேற்றாது நிறைவேற்று அதிகாரத்தை பாவிக்காதிருப்பது ஏன்?

இவ்வாறுசமூகநீதிக்கானசெயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவரால் இன்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழர் திருநாளில் தமிழர் தாயகத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, சிங்கள பௌத்த ஆதிக்க இனவாத நோக்கில் கட்டப்பட்ட சட்டவிரோத விகாரை கட்டடத்தின் பிக்குவை, தான் கலந்து கொண்ட கூட்டத்தின் முன் வரிசை ஆசனத்தில் அமர்த்தி அழகு பார்த்தவர். இனவாத சட்டவிரோத விகாரைக்கு எதிராகவும், இராணுவத்தினரின் தனியார் நிலங்களின் ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் போராடுபவர்களை இனவாதிகள் என அடையாளப்படுத்தி தமிழர் தாயக மக்களை அவமானப்படுத்தி உள்ளார். இதுதான் தமிழர் திருநாளில் தமிழர்களுக்குக் கொடுத்த பரிசா? என கேட்பதோடு இதற்கான எதிர்ப்பைத் தமிழ் தேசப்பற்றாளர் உடனடியாக வெளிப்படுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

தையிட்டி விகாரையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி என்பது, சட்டவிரோத விகாரைக் கட்டடத்தை அகற்றி மக்களின் காணிகளை மக்களின் கைகளில் கொடுப்பதாகும். அதுவே தமிழர்களுக்கான நீதியாகவும் அமையும். சட்டம் அனைவருக்கும் சமம். தெற்குக்கும் வடக்குக்கும் ஒரே சட்டம் எனக் கூறும் ஜனாதிபதி, தற்போதைய விகாரை விடயத்தில் அதனை நிறைவேற்றாது நிறைவேற்று அதிகாரத்தை பாவிக்காதிருப்பது ஏன்?

சட்ட விரோத விகாரைக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஜனாதிபதி தயங்குவதாகவும், இனவாத சிங்கள பௌத்த பேரினவாதத்துக்குப் பயந்து நிற்பதாகவும் நாகவிகாரை பிக்கு ஜனாதிபதி அவரை சந்தித்த பின்னர் ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ளார்.

இனவாதம் மதவாதத்தின் காலடியில் விழுந்து கிடக்கும் ஒருவர் சொந்த காணிகளை கேட்டு நடக்கும் போராட்டத்தை இனவாதம் என குறிப்பிடுவதில் என்ன நியாயம் உள்ளது?

தைப்பொங்கல் என்பது உழைக்கும் வர்க்கத்தின் விழா. மண்ணோடு ஒட்டிய வாழ்வின், வாழ்வு கலாச்சாரத்தின், பண்பாட்டின் விழா மட்டுமல்ல மண் தமது வியர்வை விழுந்த மண்ணின் சுதந்திர வாழ்வுக்கான அரசியல் உரிமை சார் விழாவமாகும். இதனை கௌரவப்படுத்துவது என்பது மண்ணின் மக்களை சுதந்திரமாக வாழ விடுவதாகும். அதற்கான எந்த உறுதிமொழியையும் ஜனாதிபதி தனது உரையில் வெளிப்படுத்தவில்லை.தேர்தல் காலங்களில் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாகக் கூறியவர் அதற்கான எந்த உத்தரவாதத்தையும் கொடுக்கவில்லை. விடுவிக்கப்படாத காணிகள் தொடர்பாக தெளிவாக கூறாதவர் தமிழ் மக்களின் மண்ணில் நின்று தம் மக்களை புண்படுத்தியதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழர்களோடு விழா கொண்டாட வந்த ஜனாதிபதி தமிழர்களின் அரசியல் பண்பாட்டு விழாவைத் தமது அரசியல் களியாட்ட விழாவாக்கி மகிழ்ந்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி எதிர்வரும் பெப்ரவரி நான்காம் திகதியும் அவர்களின் சுதந்திர தினத்தில் தமிழர் தாயகத்தில் அவர்களின் களியாட்ட நிகழ்வுகளுக்குத் திட்டமிட்டிருப்பார்கள். தமிழ் மக்களின் மண் பல்வேறு வடிவங்களில் ஆக்கிரமிக்கப்பட்டு பறிபோய் கொண்டு இருப்பது போல எமது தேசிய அரசியலும் தேசிய மக்கள் சக்தியின் போலி அரசியல் களியாட்டங்களால் ஆக்கிரமிக்கப்படும் அபாயம் நிலவுகின்றது.

இதற்கும் ஜனாதிபதி எமது மண்ணிலிருந்து எம்மை அவமானப்படுத்தியமைக்கும் முழு எதிர்ப்பைக் காட்டவும் எதிர்வரும் சுதந்திர தினத்தைத் தமிழர் தேசம் தழுவிய கரி நாளாக்குவதற்கு, அரசியல் தலைமைகளும், சிவில் சமூக அமைப்புகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விடுதலையை மையப்படுத்தியது சமயங்கள்.எனவே அனைத்து சமய தலைமைகளும், அவர்கள் சமய மையங்களும் அதற்கான ஒத்துழைப்பை நல்க வேண்டும் எனவும் கேட்கின்றோம்.– என்றுள்ளது.





# சந்நிதியான் ஆச்சிரமத்தின் தெய்வீக இசை அரங்கம்

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் வெள்ளிக்கிழமை தெய்வீக இசை அரங்கம் இடம்பெற்றது.

மதுராங்கனி நந்தகோபால், அக்ஷலா நந்தகோபால் ஆகியோரது பாடல்கள் ஹார்மோனியம் – இசைக்கலைமணி நடேசு செல்வச்சந்திரன், தபேலா – வித்துவான் மகேந்திரம் பிரபா, மிருதங்கம்– க. இசைநிலவன் ஆகிய அணிசெய் கலைஞர்களுடன் இடம்பெற்றது.

உதவித் திட்டங்களாக, ஒடக்கரை, சங்கானை பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு விசாலாக்ஷ சமேத காசிவிஸ்வநாதசிவன் தேவஸ்தான பரிபாலன சபையின் கோரிக்கைக்கு அமைவாக, மடப்பள்ளி, மற்றும் களஞ்சிய அறை திருந்தச் செலவுகளுக்காக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.









# வீதியோரங்களில் கொட்டப்படும் கழிவுகளால் போக்குவரத்துச் செய்ய முடியாது மக்கள் சிரமம்





(எம்.எம்.நௌபீக்- தோப்பூர்)

திருகோணமலை மாநகர சபைக்கு உட்பட்ட மயான வீதியின் இரு பக்கங்களிலும் திண்மக்கழிவுகள் வீசப்பட்டுள்ளதால் துர்நாற்றம் வீசுவதுடன் வீதியும் அலங்கோலமாக காட்சியளிக்கிறது என்று பாதசாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியில் பல இடங்களில் குப்பைகள் கொட்ட வேண்டாம் என்ற பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டும் அதனையும் பொருட்படுத்தாது பொதுமக்கள் சிலர் மக்கள் நடமாட்டமற்ற நேரங்களில் குப்பைகளை வீசிச்செல்வதாக அறிய முடிகின்றது.

குறிப்பாக வீட்டுசமையல் கழிவுகள், விலங்குகளின் கழிவுகள் மற்றும் ஏனைய திண்மக் கழிவுகளை வீசிச் செல்வதால் பயணிகள் அசௌகரியங்களுடன் பயணிக்கின்றனர்.

இது தொடர்பாக பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



ப.கிஸ்ணவேணி,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# பழமொழிகளில் பெண்கள் பற்றிய நிலைப்பாடு...!

பழமொழி என்பது ஒரு சமூகத்தில் தலைமுறைகளாக கடந்து சொல்லப்பட்டுவரும் நீண்ட கால அனுபவம், அறிவு, சிந்தனை மற்றும் பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தும் மக்கள் மனதில் ஆழமாக பதிந்திருக்கும் வாழ்வுக்கு வழிகாட்ட பயன்படும் அனுபவக் குறிப்பாகும்.

பெண்கள் பற்றிய பழமொழிகளை யாழ்ப்பாண பிரதேசத்தை அடிப்படையாக கொண்டு கள ஆய்வு மேற்கொண்டபோது சில பழமொழிகளைக் கூறி இருந்தனர். பெண் என்பவள் உணவைக் குறைவாகத்தான் உண்ண வேண்டும். அப்போதுதான் அழகாக இருக்க முடியும் என்பதை "உண்டி சுருங்குதல் பெண்டிற்கு அழகு" என்ற பழமொழியில் ஒரு பெண் உணவை அளவாக உண்ண வேண்டும். அப்படி இல்லாவிட்டால் அவளை ஏற்கமாட்டார்கள் என்று குறிப்பிடுவதாக இந்தப் பழமொழி உள்ளது.

அதேபோல "பூவுள்ள மங்கை பொற்கொடி போன இடம் எல்லாம் செருப்படி" இதனூடாக பல அலங்காரம் செய்து சென்றாலும் அடக்க குணம் இருக்க வேண்டும் இல்லாவிடில் அவளை ஏற்றுக்கொள்ள மாட்டார் என்று குறிப்பிடுவதாக உள்ளது.

" பொம்பள சிரிச்சா போச்சு புகையிலை விரிச்சா போச்சு" பெண்களை எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை வெளிப்படுத்துவதாக இது உள்ளது. அதாவது குடும்ப மானம் பெண்களைப் பொறுத்துள்ளது ஆணுடன் அதிக அளவு சிரித்து பேசி மகிழ்ந்தால் சரி இல்லை என்பதாகும்.

மகிழ்ச்சிக்கு கூட கட்டுப்பாடு போடுவதாகப் பழமொழி உள்ளது "சிரித்தாயோ சீரை குலத்தாயோ" சிரிப்பு அளவோடு இருக்க வேண்டும் எனவும் "பெட்டை கோழி கூவியா பொழுது விடுகிறது" என்ற மாதிரியான பழமொழிகளையும் கூறியிருந்தனர்.

பெண்கள் என்றாலே குழந்தையே பெறுவது அவளது கடமை என்ற மாதிரியும் குழந்தையே இல்லாவிடில் அவளை வேதனைப்படுத்துவதாகவும் "மலடிக்கு தெரியுமா பிரசவ வேதனை" என்று கூறி அவர்களை இன்னும் வேதனைப்படுத்துவதாக இப்பழமொழி உள்ளது.

பெண்கள் கணவனுக்கு அடிபணிந்து இருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துவதாக "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்ற பழமொழியும் பெண்கள் பிறந்த நட்சத்திரத்தைக் கொண்டும் அவர்களே குறிப்பிடுகின்றனர். "பெண் மூலம் நிர்மூலம்" என்று சில பழமொழிகளை கூறி இருந்தனர்.

சில பழமொழிகள் மூலம் பெண்களைப் எவ்வாறு பார்க்கின்றனர் என்று அவர்களது நிலைமையே புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

இவ்வாறு பழமொழிகள் காணப்பட்டாலும் பெண்கள் கல்வி, அறிவியல், விளையாட்டு, ஊடகம் என எல்லாத்துறைகளிலும் முன்னேறி வருகின்றனர்.

சமூக மாற்றத்துக்கு ஏற்ப பழமொழி திருத்தப்பட வேண்டும். பெண்களை இழிவுபடுத்தும் பழமொழிகளை விமர்சிப்பதும் காலத்துக்கு ஏற்ப மாற்றி அமைப்பதும் நமது பொறுப்பாகும்.



நாகராசா தனுஸ்காந்,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

# தையிட்டி விகாரை தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் அணுகுமுறையும் - ஜனநாயகமும்!

புதிய அரசியல் சக்தியாக தேசிய மக்கள் சக்தி ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டைக் கடந்துள்ளது. தமது தேர்தல் அறிக்கைகள் மற்றும் மேடைகளில் சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்வோம் என்றும் ஊழல், மோசடி, வீண்விரயம் ஆகியவற்றை ஒழித்து, நாட்டை மீண்டும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் உறுதி மொழியுடன் ஆட்சியை ஏற்றது.

அந்தவகையில் தையிட்டி ஆக்கிரமிப்பு விகாரை விவகாரத்தில் சட்டத்தின் ஆட்சியை நடைமுறைப்படுத்துவதற்கும், அரசு அவ்வப் போது மேடைகளில் முழங்கிய மக்களின் நிலங்களை மக்களுக்கே வழங்குவோம் என்ற வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கும் முடியாமல் இருக்கின்றது.

மக்களுக்குச் சொந்தமான நிலங்கள் மீண்டும் அவர்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதில் அரசு உறுதியாக இருப்பதாக ஸ்ரீலங்காவின் அரச தலைவர் அநுர குமார திசாநாயக்க 31.01.2025 அன்று நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், 26.04.2025 அன்று கிளிநொச்சியில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் பொதுக் கூட்டம், 01.09.2025 அன்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய பணிமனை திறப்பு விழா போன்ற சந்தர்ப்பங்களில் அடுத்தடுத்துப் பல வாக்குறுதிகளை அள்ளி வீசியிருந்தார்.

சட்டபூர்வமான காணி உறுதிப் பத்திரங்களுடன் உரிமையாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் நிலத்தை ஆக்கிரமித்து விகாரை அமைக்கப்பட்டுள்ளது. ஒரு புறம் அனுமதிகளற்ற கட்டுமானங்களுக்கு எதிராக வலி.வடக்கு பிரதேச சபையினர் தமது சட்டபூர்வ கடமைகளை ஆற்றுவதிலிருந்து தடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆக்கிரமிப்பு விகாரையின் விகாராதிபதிக்கு புதிய பதவி உயர்வு. அமைதிவழி போராட்டத்தில் தவத்திரு வேலான் சுவாமி முறையற்ற விதத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அத்தோடு மக்களின் காணிகளை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை சட்ட விரோதமானது என்றும், மக்களிடம் உறுதிப் பத்திரங்கள் உள்ளமையை அறிந்தும் அது கட்டப்பட்டுள்ளது என நயினாதீவு நாக விகாரை விகாராதிபதி தனது எதிர்ப்பையும் பதிவு செய்துள்ளார்.

இவ்வாறானதொரு சூழலில் விகாரையுள்ள பகுதியை ஆளுகை செய்யும் வலி. வடக்குப் பிரதேச சபையால் சட்டவிரோத கட்டுமானம் என்று பிரகடனப்படுத்தி, மும்மொழிகளிலும் அறிவித்தல் பலகையை நடுவதற்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருந்தது.

அறிவித்தல் பலகையை நாட்டுவதற்குச் சென்ற பிரதேச சபையினரின் சட்டபூர்வக் கடமைக்கு இடையூறு விளைவித்த ஸ்ரீலங்கா பொலிஸார் மீது இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆவ்வாறு இருக்கையில் மறுபுறம் தையிட்டி சட்டவிரோத ஆக்கிரமிப்பு விகாரையை இடிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கடந்த டிசெம்பர் 26ஆம் திகதி நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அழுத்தம் திருத்தமாக தெரிவித்து விட்டார் அமைச்சர் இ.சந்திரசேகரன். போதாக்குறைக்கு கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில், அபகரிக்கப்பட்ட காணிகளைப் பகுதியளவிலேனும் விடுவிப்பதற்கு திஸ்ஸ விகாரை விகாராதிபதியும் சிறிலங்கா பௌத்த சாசன அமைச்சின் பிரதிநிதிகளும் திட்டவட்டமாறு மறுத்துள்ளனர்.

மக்களின் நிலங்களை மக்களுக்கே மீளப் பெற்றுக் கொடுப்பதற்கோ, சிங்கள - பௌத்த பேரினவாத்தை அரசுக் கட்டமைப்பிலிருந்து நீக்குவதற்கோ தேசிய மக்கள் சக்தி அரசு தயாராக இல்லை என்பதை உணர்த்துகின்றது. அன்று தொட்டு இன்றுவரை ஸ்ரீலங்கா பௌத்த சாசனத்தின் கட்டமைப்பின் சேவகனாக அரசு இருந்து வருவதை தற்போதும் இந்தச் சம்பவங்கள் தெளிவுபடுத்தி நிற்கின்றன.

அத்தோடு சுமூகமான தீர்வை எட்டுவதற்கு ஸ்ரீலங்காவின் புத்தசாசன அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட பேச்சுவார்த்தையின் போது "விகாரையை முழுமையாக அகற்றாமல் அதனைச் சூழவுள்ள காணிகளை விடுவிப்பதென்றும் விகாரையை இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து பௌத்த விவகாரத் திணைக்களத்தின் கீழ்க் கொண்டு வருவதென்றும் முன்மொழியப்பட்டது. நிலத்தின் உரிமையாளர்கள் "தமது பூர்வீக நிலம் முழுமையாக மீள

தொடர்ச்சி▼



# தையிட்டி விகாரை தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் அணுகுமுறையும் - ஜனநாயகமும்!

தொடர்ச்சி▲

ஒப்படைக்கப்பட வேண்டும்” என்பதில் உறுதியாக இருந்ததாலும், விகாரையை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்ற கோரிக்கையாலும் உடன்பாடுகள் எவையும் எட்டப்படவில்லை.

மக்களின் நிலங்களை ஆக்கிரமித்துக் கட்டப்பட்ட சட்டவிரோத விகாரைக்குப் பதிலாக தமிழ் மக்களிற்கு நட்டஈடு அல்லது மாற்றுக் காணி வழங்கவோ திட்டமிடப்பட்டுள்ளது என்று அமைச்சர் சந்திரசேகரனால் 12.06.2025 அன்று நடைபெற்ற வலி. வடக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் டிசெம்பர் மாதக் கூட்டத்தில், விகாரையை இடிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அழுத்தமாகத் தெரிவித்துவிட்டார். மாற்றுக் காணிகள் வழங்குவதென்பது காணி உரிமையாளர்கள் ஏற்றுக் கொள்ளாத வரைக்கும் நடக்கப் போவதில்லை. இந்த சிக்கல் நிலைமையைப் பொறுத்தவரையில் என்.பி.பி. அரசின் முன்னால் இருப்பது இரண்டு வழிகள் மட்டும்தான்.

முதலாவது, சட்டத்துக்குப் புறம்பாக ஆக்கிரமித்துக் கட்டப்பட்டுள்ள விகாரையை இடித்து அகற்றி நிலத்தின் உரிமையாளர்களிடம் அவர்களின் நிலங்களை ஒப்படைத்து பிரச்சினையைத் தீர்த்து வைப்பது. ஆனால் அதற்கு தெற்கில்பாரிய எதிர்ப்புக்கள் எழும் என்பதோடு, சிங்கள - பௌத்த பேரினவாத மனோநிலை இடம் கொடுக்காது என்பதும் யதார்த்தமாகும்.

இரண்டாவது, விகாரையை அப்படியே இருக்கும் நிலையில் பேணுவது. சிங்கள பௌத்த நிலைப்பாட்டில் சிக்கலை அணுகுவதுதான் என்.பி.பி. அரசுக்கு மிகவும் வசதியானதொன்று. இது சட்டம், அறம் என்பவற்றை விட ஸ்ரீலங்கா அரச கட்டமைப்பில் சிங்கள பௌத்தவாதம் எவ்வளவு மேலானது என்பதை வெளிப்படுத்தும்.

தேசிய மக்கள் சக்தி அரசு நடைமுறையில் அந்த விகாரையை அகற்றப் போவதில்லை என்பது வெளிப்படை. அவர்களுக்கு முன்னால் உள்ள பெரும் சவால் காணி உரிமையாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களின் அறப் போராட்டங்கள். அவற்றின் கூட்டுப் பலத்தை இல்லாதொழிப்பதற்கு அநுர அரசு தற்போது தேர்ந்தெடுத்தவழி வெறும் 02 ஏக்கர் காணிகளை விடுவித்தல். இது நிலவுரிமைக்கான அந்த மக்களின் போராட்டங்களின் வீரியத்தை தணிப்பதற்கும், அவர்களைப் பிளவுபடுத்தித் தனிமைப்படுத்தும் முதலாளித்துவ அரசுகளின் வழமையான அணுகுமுறையாகவே காணப்படுகின்றது.

தமது ஆட்சிக் காலத்தில் தையிட்டி திஸ்ஸ விகாரை அமைக்கப்படவில்லை என்றும் அது தனியார் காணிகளில் அமைக்கப்பட்டுள்ளதை அமைச்சர் சந்திரசேகரன் ஏற்றுக் கொண்ட போதிலும், காணிகளை இழந்த மக்களுக்கு இழப்பீடுகளைப் பெற்றுக் கொடுப்பதே தமது அரசின் நிலைப்பாடு என்பதைத் தெரிவித்திருந்தார்.

ஊழல், மோசடி, போதை, சட்டத்தின் ஆட்சி என்பவற்றில் கடந்தகால அரசுகளின் அணுகுமுறைகள், மரபுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவோம் என்று என்.பி.பி. சொன்னாலும் அவை தெற்கின் அரசியல் குறை நிரப்பியாகவே அமையும். வடக்கு - கிழக்கில் சட்டத்தின் ஆட்சியை நடைமுறைப்படுத்துவதில் சிங்கள பௌத்த பேரினவாத அணுகுமுறையில் இடம் இல்லை என்பதைத் தையிட்டி விவகாரம் உறுதி செய்துள்ளது.

சட்டத்தின் ஆட்சி, வலுவேறாக்கம் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதாக ஆட்சிப் பொறுப்பேற்ற என்.பி.பி. அரசு சட்டத்துக்கு விரோதமாக நடைபெற்ற ஆக்கிரமிப்பை முறைப்படுத்தி சட்டபூர்வமாக்குவதற்கான செயல்களில் ஈடுபடுகின்றமையைச் சமீபகால நடவடிக்கைகள் வெளிப்படுத்துகின்றன. எவ்வாறாக இருப்பினும் இலங்கையின் அரசியல் மாற்றத்துக்கு அமைவாக அரசியல் வாக்குறுதிகளுக்கு முழுமையான தீர்வுகள் கிடைக்க வேண்டும் என்பது மக்களுடைய போராட்டமாகக் காணப்படுகிறது.







# அசாம் போடோ பழங்குடியினரின் நடனத்தைப் பார்வையிட்டார் மோடி

அசாம் மாநிலத்தில் 2 நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் நரேந்திர மோடி, கின்னஸ் சாதனைக் காக 10,000 போடோ பழங்குடியி னர் பங்கேற்கும் பகுரும்பா நடனத்தை பார்வையிட்டார்.

அசாம் மாநிலத்துக்கு 2 நாள் சுற்றுப் பயணமாக பிரதமர் மோடி நேற்று மாலை சென்றார். இங்கு கின்னஸ் சாதனைக்காக போடோ பழங்குடியின கலைஞர்கள் 10,000 பேர் பங்கேற்ற பகுரும்பா நடனம், குவாஹாட்டி நகரில் உள்ள அர்ஜுன் போகேஸ்வர் பரூவா விளையாட்டு அரங்கில் நேற்று மாலை நடைபெற்றது. இதை பிரதமர் மோடி பார்வையிட்டார். அசாம் ஆளுநர் லட்சுமன் பிரசாத் ஆச்சார்யா, மாநில முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா ஆகியோரும் பிரதமர் மோடியுடன் இந்த நடனத்தை பார்வையிட்டனர்.

குவாஹாட்டி நகரில் உள்ள அரசு விருந்தினர் மாளிகையில் நேற்று இரவு தங்கிய பிரதமர் மோடி, இன்று காலை கலியாபோர் செல்கிறார். இங்கு 6,957 கோடி ரூபா மதிப்பில் காசி ரங்கா தேசிய பூங்காவின் விரிவாக்க பணிகளுக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டுகிறார். இங்கு நடைபெறும் பொதுக் கூட்டத்திலும் பிரதமர் மோடி உரையாற்றுகிறார்.


மேலும் திப்ரூகர் – கோமதி நகர் (லக்னோ) மற்றும் காமக்யா – ரோத்தக் ஆகிய வழித்தடங்களில் அம்ரித் பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்கள் சேவையை பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார்.





# அ.தி.மு.க. ஒன்றிணையாமல் தி.மு.கவை வீழ்த்த முடியாது

## ஓ.பன்னீர்செல்வம் மீண்டும் திட்டவட்டம்



அ.தி.மு.க. ஒன்றிணையாமல் தி.மு.கவை வீழ்த்த முடியாது என முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மீண்டும் தெரிவித்துள்ளார்.

எம்.ஜி.ஆரின் 109 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை அண்ணா சாலையில் உள்ள எம்.ஜி.ஆர். சிலைக்கு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“2026 சட்டப்பேரவை தேர்தலில் யாருடன் கூட்டணி என்பதை ஓரிரு தினங்களில் அறிவிப்பேன்.

எம்.ஜி.ஆர். உருவாக்கிய சட்ட விதிப்படிதான் எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் அ.தி.மு.கவை வளர்த்து வந்தனர். அந்த சட்ட விதிக்கு இன்று ஊறு ஏற்பட்டு இருக்கிறது. அதாவது, பொதுச் செயலாளர் என்ற தலைமைப் பதவி, தேர்தல் மூலமாக அ.தி.மு.க. தொண்டர்களால் தேர்வு செய்யப்பட வேண்டும். ஆனால் இந்த சட்டவிதியை திருத்தம் செய்துள்ளனர்.

இதை எதிர்த்துதான் 6 வழக்குகள் உச்ச நீதிமன்றம் வரை சென்றது. அவை ஒருங்கிணைக்கப்பட்டு உயர் நீதிமன்றத்தில் உள்ள சிவில் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இதில் உறுதியாக வெற்றி கிடைக்கும். அ.தி.மு.கவில் இருந்து பிரிந்து இருக்கும் சக்திகளை ஒன்றிணைக்க வேண்டும். அவ்வாறு இல்லை யெனில் இப்போது உள்ள அ.தி.மு.கவால் தி.மு.கவை வீழ்த்த முடியாது.

பழனிசாமி பொறுப்பேற்றுக் கொண்டதில் இருந்து இதுவரை சந்தித்த 11 தேர்தல்களிலும் அ.தி.மு.க. தோல்விதான் கண்டி ருக்கிறது. சர்வாதிகாரப் போக்கில், இவரை சேர்ப்போம். அவரை சேர்க்க மாட்டோம் என்று கூற யாருக்கும் அதிகாரம் இல்லை.” என்று தெரிவித்துள்ளார்.

# அமைச்சர் துரைமுருகன் மருத்துவமனையில் அனுமதி

## முதல்வர் ஸ்டாலின் நலம் விசாரித்தார்



உடல்நல குறைவு ஏற்பட்டதால் அமைச்சர் துரைமுருகன், சென்னை அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் மருத்துவமனைக்கு நேரில் சென்று நலம் விசாரித்துள்ளார்.

தமிழக அரசின் சட்டம் மற்றும் நீர்வளத் துறை அமைச்சராகவும், தி.மு.க. பொதுச் செயலாளராகவும் இருப்பவர் துரைமுருகன். 87 வயதாகும் அவருக்கு வயது மூப்பால் வரும் பிரச்சினைகளுக்காக, அவ்வப்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு. சிகிச்சை பெற்று வீடு திரும்பி வருகிறார்.

இந்நிலையில், நேற்று துரைமுருகனுக்கு உடல்நல குறைவு ஏற்பட்டதால், சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இதுபற்றி தகவல் அறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் மருத்துவமனைக்கு நேரில் சென்று துரைமுருகனை சந்தித்து நலம் விசாரித்தார்.தொடர்ந்து. அவருக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்து சென்றார்.

# ஐரோப்பிய ஒன்றியம் - மெர்கோசூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்து

27 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் தென் அமெரிக்க நாடுகளின் கூட்டமைப்பான மெர்கோசூர் ஆகியவற்றிற்கு இடையே நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் உத்தியோகபூர்வமாகக் கையெழுத்தானது.

சுமார் 25 ஆண்டுகளாக இழுபறியிலிருந்த இந்தப் பேச்சுவார்த்தைகள் தற்போது வெற்றியில் முடிந்துள்ளன.

இது உலகின் மிகப்பெரிய சுதந்திர வர்த்தக வலயங்களில் ஒன்றை உருவாக்குவதற்கான அடித்தளமாக அமையும் எனப் பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 நாடுகள் மற்றும் மெர்கோசூர் அமைப்பில் உள்ள



பிரேசில், அர்ஜென்டினா, உருகுவே மற்றும் பராகுவே ஆகிய நாடுகள் இதில் அடங்குகின்றன.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் இரு பிராந்தியங்களுக்கும் இடையிலான சுங்க வரிகள் பெருமளவு குறைக்கப்பட்டு, விவசாயம் மற்றும் கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதி, இறக்குமதி ஊக்குவிக்கப்படும் எனச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# உகாண்டா தேர்தல் முடிவுகள்; யோவேரி முசேவேனி வெற்றி



உகாண்டாவின் ஜனாதிபதியாக யோவேரி முசேவேனி 7 ஆவது முறையாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உகாண்டாவின் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட 81 வயதான யோவேரி முசேவேனி, 71.65 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட 43 வயதான பாபி வைன் 24.72 சதவிகித வாக்குகளைப் பெற்றுள்ளார்.

சுமார் 4.5 கோடி மக்கள் தொகை கொண்ட உகாண்டாவில், இந்த முறைத் தேர்தலில் 2.16 கோடி மக்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றனர்.

எனினும் 52 சதவிகிதத்தினர் மாத்திரமே வாக்களித்துள்ளனர் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

1986ஆம் ஆண்டு ஆட்சிக் கவிழ்ப்பைத் தொடர்ந்து, யோவேரி முசேவேனி ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

நாடாளுமன்றத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஆளுங்கட்சியான முசேவேனியின் தேசிய எதிர்ப்பு இயக்கக் கட்சி, வயது மற்றும் பதவிக்கால வரம்புகளை நீக்குவதற்கு அரசமைப்பை பல முறை மாற்றியதன் மூலம் முசேவேனியின் பதவியும் தக்கவைக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

# காசா மறுகட்டமைப்புக்கு 'சமாதான சபை'; டோனி பிளேயர், மார்கோ ரூபியோ நியமனம்

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் 20 அம்சத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 'சமாதான சபை' என்ற புதிய உயர்மட்டக் குழு அறிவிக்கப்பட்டுள்ளது.

வொஷிங்டன் வெள்ளை மாளிகை வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, இந்தச் சபையின் 'ஸ்தாபக நிறைவேற்றுச் சபையில்' அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மார்கோ ரூபியோ, பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் டோனி பிளேயர், ட்ரம்பின் மருமகனும் முன்னாள் ஆலோசகருமான ஜாரெட் குஷ்னர், ட்ரம்பின் மத்திய கிழக்கு நாடுகளுக்கான விசேட தூதுவர் ஸ்டீவ் விட்கோஃப், உலக வங்கித் தலைவர் அஜய் பங்கா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இந்தச் சபையின் தலைவராகச் செயற்படுவார்.

இந்தச் சமாதான சபை தற்காலிகமாக காசாவின் நிர்வாகத்தைக் கண்காணிப்பதோடு, போரினால் அழிந்து போன காசாவை மீண்டும் கட்டியெழுப்பும் பணிகளையும் நிர்வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





குறிப்பாக, காசாவில் ஆட்சி அதிகாரத்தை முன்னெடுக்க நியமிக்கப்பட்டுள்ள 'பலஸ்தீன தொழில்நுட்பக் குழுவை' இந்தச் சபை கண்காணிக்கும். மேலும், காசாவின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த ஒரு சர்வதேச பாதுகாப்புப் படையை உருவாக்குவதிலும் இந்தச் சபை முக்கிய பங்காற்றும்.

இதனிடையே, பிரித்தானிய முன்னாள் பிரதமர் டோனி பிளேயரின் நியமனம் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் சில சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 2003 ஆம் ஆண்டு ஈராக் மீதான படையெடுப்பில் அவர் வகித்த பங்கு காரணமாக, இந்தப் புதிய பொறுப்பில் அவரது தலையீட்டைச் சில மனித உரிமை ஆர்வலர்கள் விமர்சித்து வருகின்றனர்.

இருப்பினும், இந்தச் சபையானது "இதுவரை உருவாக்கப்பட்டதிலேயே மிகவும் கௌரவம் மிக்க சபை" என்று ஜனாதிபதி ட்ரம்ப் வர்ணித்துள்ளார். எதிர்வரும் வாரங்களில் மேலதிக உறுப்பினர்களின் பெயர்கள் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக பொலிஸார் மற்றும் சர்வதேசப் படையினரின் ஒத்துழைப்பும் இந்த திட்டத்தில் கோரப்பட்டுள்ளது.

கனடா முரசு

பக்கங்கள் - 02

ஞாயிற்றுக்கிழமை 18/01/2026

## நோர்த் யோர்க் தாக்குதல் வழக்கில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் கைது




C2▶




# சீனாவுடன் செய்த மின்சார வாகன வர்த்தக ஒப்பந்தம் 'பெரும் தவறு'

## ஒன்டாரியோ வர்த்தக அமைச்சர்

சீனாவுடன் பிரதமர் மார்க் கார்னி செய்துள்ள மின்சார வாகன வர்த்தக ஒப்பந்தம் ஒரு மோசமான குழப்பம் என ஒன்டாரியோ பொருளாதார மேமபாடு, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் வர்த்தக அமைச்சர் விக் ஃபெடெலி விமர்சித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை ஒன்டாரியோ மாநிலத்தின் நோர்த் பே நகரில் செய்தியாளர்களிடம் பேசிய ஃபெடெலி, சீனாவில் தயாரிக்கப்பட்ட மின்சார வாகனங்களை கனடாவுக்குள் அனுமதிப்பது மிகவும் பயங்கரமான தவறு என்றார்.

"சுற்றுச்சூழல் பாதுகாப்பு இல்லாமல், வேலைவாய்ப்பு தரநிலைகள் இல்லாமல் தயாரிக்கப்படும் வாகனங்களை நாட்டுக்குள் கொண்டு வருகிறார்கள். அதற்குப் பதிலாக, ஒன்டாரியோவில் உள்ள வாகன உற்பத்தியாளர்களுக்கு உதவுவதில்அவர்கள்கவனம்செலுத்த வேண்டும்," என்று அவர் கூறினார்.

C2▶

# ஒன்டாரியோவில் பனிப்பொழிவுக்கு மத்தியில் அலுவலகம் வருமாறு ஊழியர்களுக்கு அறிவிப்பு






பெரும் பனிப்பொழிவு காரணமாக நெடுஞ்சாலைகள், பாடசாலைகள் மற்றும் குழந்தை பராமரிப்பு மையங்கள் மூடப்பட்டிருந்த நேரத்தில், சில ஒன்டாரியோ அரசு ஊழியர்களுக்கு அலுவலகத்திற்கு வரவேண்டும் அல்லது விடுமுறை நாள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது .

போக்குவரத்து அமைச்சகத்தில் பணியாற்றும் சில ஊழியர்களுக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சல் ஒன்றில், மாகாண அரசின் புதிய வாரத்தில் 5 நாள்கள் நேரில் அலுவலகத்தில் பணிபுரிய வேண்டும் என்ற விதிமுறையை நினைவூட்டியுள்ளது.

இந்த மின்னஞ்சல் வியாழக் கிழமை காலை அனுப்பப்பட்டுள்ளது. அப்போது, ஒன்டாரியோ முழுவதும் 40 சென்றிமீற்றர் வரை பனி பெய்து கொண்டிருந்தது. நூற்றுக்கணக்கான விபத்துகள் பதிவாகி, மக்கள் வீதிகளில்

C2▶

# நோர்த் யோர்க் தாக்குதல் வழக்கில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் கைது

கடந்த மாதம் நோர்த் யோர்க் பகுதியில் ஒருவரை தாக்கிய குற்றம் குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் டொராண்டோ பொலிஸார் தெரிவிக்கையில், இந்த தாக்குதல் டிசம்பர் 21 மாலை லாரன்ஸ் அவென்யூ வெஸ்ட் மற்றும் டி மார்கோ புலவர்ட் அருகே நடைபெற்றது.

அந்த பகுதியில் ஒருவர் நடந்து சென்றுகொண்டிருந்த போது, ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் அவரை அணுகியுள்ளனர். பின்னர் அந்த ஆண், அந்த நபரை ஒரு கடினமான பொருளால் தாக்கியுள்ளார் என கூறப்படுகிறது. தாக்குதலுக்குப் பிறகு, அந்த இருவரும் அங்கிருந்து தப்பிச் சென்றனர் என பொலிஸார் தெரிவித்தனர்.



பாதிக்கப்பட்ட நபர் பின்னர் கடுமையான காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இந்த மாதத்தின் தொடக்கத்தில், சந்தேக நபர்களை அடையாளம் காணவும், அவர்களின் இருப்பிடத்தைத் தெரிந்துகொள்ளவும் பொதுமக்களின் உதவியை கோரி, பொலிஸார் அந்த ஆண் மற்றும் பெண்ணின் புகைப்படங்களை வெளியிட்டிருந்தனர்.

கடந்த சனிக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில், விசாரணையின் முடிவில் ஒரே ஒரு சந்தேக நபரே இருப்பது தெரியவந்தது என்றும், அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் பிராட்ஃபோர்டைச் சேர்ந்த 39 வயதான கிரெக்மோர் ஓசுபா ஓசாவே என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவர் மீது தாக்குதல், ஆயுதத்துடன் தாக்குதல், கடுமையான தாக்குதல் ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த வழக்கில் வேறு சந்தேக நபர்கள் இல்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# டொராண்டோ நகர மையத்தில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் கத்திக்குத்து

## ஒருவர் மருத்துவமனையில் அனுமதி

டொராண்டோ நகர மையத்தில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் ஒருவர் கத்திக்குத்து தாக்குதலுக்கு உள்ளானதைத் தொடர்ந்து, டொராண்டோ பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

நேற்று சனிக்கிழமை இரவு 8:30 மணியளவில், டண்டாஸ் ஸ்ட்ரீட் ஈஸ்ட் மற்றும் ஷெர்போர்ன் ஸ்ட்ரீட் பகுதியிலுள்ள அந்த அடுக்குமாடி குடியிருப்பில் கத்திக்குத்து சம்பவம் நடந்ததாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவிக்கையில், 20 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். அவரது காயங்கள் உயிருக்கு ஆபத்தானவை அல்ல என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய தாகக் கருதப்படும் வெள்ளை இனத்தைச் சேர்ந்த பெண் சந்தேக நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

அவர் கறுப்பு ஸ்வெட்டர், ஜீன்ஸ் மற்றும் வெள்ளை காலணிகள் அணிந்திருந்தார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

---

**சீனாவுடன்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் உடன் முதற்கட்டமான, ஆனால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை பெற்றுள்ளதாக பிரதமர் கார்னி வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கிடையிலான சுங்கவரி போரை முடிவுக்குக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டது.

இந்த ஒப்பந்தத்தின் படி, கனடா ஆண்டுக்கு 49,000 சீன மின்சார வாகனங்கள் வரை இறக்குமதி செய்ய அனுமதிக்கும். அவற்றுக்கான சுங்கவரி 6.1 சதவீதமாக குறைக்கப்படும். இதற்கு முன் அது 100 சதவீதமாக இருந்தது.

அமெரிக்க சுங்கவரிகளால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள ஒன்டாரியோ வாகன தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், நீண்ட காலத்தில் இதன் பாதிப்பை அனுபவிப்பார்கள் என்று ஃபெடெலி எச்சரித்தார்.

“ஒன்டாரியோவில் அதிகமாக உற்பத்தி செய்யவும், அதிகமாக கட்டமைக்கவும் அவர்கள் எங்களுடன் இணைந்து செயல்பட வேண்டும். மலிவு விலையில் சீன மின்சார வாகனங்களை கொண்டு வரக்கூடாது.” என்றார் அவர்.

ஒன்டாரியோ முதல்வர் டக் ஃபோர்டு கூட கனடிய வாகனத் தொழிலாளர்களுக்கு ஏற்படும் அபாயத்தை எச்சரித்தார். ஆனால், சீன சுங்கவரிகளால் பாதிக்கப்பட்டிருந்த சாஸ்காச்சுவான் முதல்வர் ஸ்காட் மோ, இந்த ஒப்பந்தத்தை ஏற்றுமதியாளர்களுக்கான வெற்றியாக பாராட்டினார்.

இந்த ஒப்பந்தம், கனடாவின் முக்கியமான ஏற்றுமதி சந்தைகளில் ஒன்றான சீனாவிற்கான அணுகலை மீண்டும் வழங்குகிறது. அமெரிக்காவிற்குப் பிறகு, கனடிய கனோலாவை அதிகம் வாங்கும் நாடு சீனா ஆகும். மேலும், பட்டாணிக்கான உலகின் மிகப் பெரிய சந்தையும் சீனாவே ஆகும்.

---

**ஒன்டாரியோவில்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்ல வேண்டாம் என அதிகாரிகள் எச்சரித்திருந்தனர்.

காலை 9:30 மணியளவில் அனுப்பப்பட்ட இந்த செய்தி, ஃபோர்டு அரசின் அலுவலகத்திற்கு திரும்பும் உத்தரவுக்கு எதிரான விமர்சனங்களை மீண்டும் எழுப்பியுள்ளது. மேலும், கடும் வானிலை நிலைகளில் ஊழியர் பாதுகாப்பு எவ்வாறு மதிப்பிடப்படுகிறது என்ற கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

ஒரு குழுத் தலைவர் அனுப்பிய இந்த மின்னஞ்சல், பனிப்பொழிவின் போது ஊழியர்கள் காட்டிய நெகிழ்வுத்தன்மைக்கு நன்றி தெரிவிப்பதுடன், மாகாணத்தின் எதிர்பார்ப்புகளையும் விளக்கியது.

“மோசமான வானிலை காலங்களில் எங்களின் எதிர்பார்ப்புகளை தெளிவுபடுத்த விரும்புகிறேன். வாரத்திற்கு 5 நாள்கள் நேரில் அலுவலகத்தில் பணிபுரியும் கட்டாயம் உள்ளது,” என அந்த மின்னஞ்சலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், பயண நிலைமைகள் கடினமாக இருந்தால், தாமதமாக வரலாம் அல்லது முன்கூட்டியே செல்லலாம் என ஊழியர்கள் தங்கள் பணிநேரத்தை சரிசெய்யலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

அது சாத்தியமில்லையெனில், நேரில் வர முடியாவிட்டால், விடுமுறை நாள் பயன்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உங்கள் பாதுகாப்பு எங்களுக்கு முக்கியம் எனவும் குளிர்கால சூழ்நிலைகளை சமாளித்தபடியே பணிநிபந்தனைகளை பின்பற்றும் உங்கள் அர்ப்பணிப்புக்கு நன்றி எனவும் அந்த மின்னஞ்சலில் கூறப்பட்டுள்ளது.

இந்த மின்னஞ்சல் உண்மையில் போக்குவரத்து அமைச்சகத்திலிருந்தே அனுப்பப்பட்டதென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், அமைச்சகம் இதுகுறித்து உடனடியாக கருத்து தெரிவிக்கவில்லை.

அன்றைய தினம் முழுவதும், என்விரான்மெண்ட் கனடா காலை 8 மணியளவில் சில பகுதிகளுக்கான பனிப்பொழிவு எச்சரிக்கையை மஞ்சள் எச்சரிக்கையிலிருந்து செம்மஞ்சள் எச்சரிக்கையாக உயர்த்தியது.

பயணம் ஆபத்தானதாக இருக்கும் என்றும் பீக் நேர போக்குவரத்தில் கடுமையான பாதிப்பு ஏற்படும் எனவும் எச்சரிக்கப்பட்டது.